Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, அக்டோபர் 18, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 96

# லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், திரிஷா, சஞ்சய் தத் நடிக்கும் லியோ' நாளை ரிலீஸ்

## காலை 7 மணி காட்சி கிடையாது லியோ படத்தின் சிறப்பு காட்சிக்கு அனுமதியில்லை - உள்துறைச் செயலாளர் அமுதா





சென்னை, 18 அக்டோபர் 2023: காலை 7 மணிக்கு லியோ படத்தின் சிறப்பு காட்சிக்கு அனுமதியில்லை என்று உள்துறைச் செயலாளர் அமுதா அறிவித்துள்ளார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், திரிஷா, சஞ்சய் தத் உள்ளிட்டோர் நடித்துள்ள லியோ திரைப்படம் நாளை (வியாழக்கிழமை) வெளியாக உள்ளது. இந்த திரைப்படத்தை நாளை முதல் 24-ந்தேதி வரை காலை 9 மணி முதல் 1.30 மணி வரை 5 காட்சிகள் திரையிட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கி அரசாணை பிறப்பித்துள்ளது.

ஆனால், முதல் நாள் ரசிகர்கள் காட்சியாக அதிகாலை 4 மணிக்கு திரைப்படத்தை திரையிட அனுமதிக்க வேண்டும். மறுநாள் முதல் 24-ந்தேதி வரை காலை 7 மணி முதல் 1.30 மணி வரை திரையிட அனுமதிக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் படத்தை தயாரித்துள்ள செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் நிறுவனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது 'லியோ' படத்தை அதிகாலை 4 மணிக்கு திரையிட அனுமதிக்க முடியாது என்றும், காலை 7 மணிக்கு திரையிட அனுமதி கேட்கும் கோரிக்கையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

இந்த நிலையில் 'லியோ' சினிமா சிறப்புக்காட்சிகள் நேரம் தொடர்பான பிரச்சினை குறித்து தலைமை செயலகத்தில் சில அதிகாரிகளை நேற்று தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர் சங்கத்தினர் சந்தித்து பேசினர். பின்னர் பத்திரிகையாளர்களுக்கு சங்கச்செயலாளர் வி.டி.எல்.சுப்பு அளித்த பேட்டி வருமாறு:-

நாளையில் இருந்து 6 நாட்களுக்கு சிறப்பு காட்சியாக 5 காட்சிகளை திரையிட அனுமதி அளித்த முதல்-அமைச்சருக்கு நன்றி. பொதுவாக தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களில்தான் சிறப்பு காட்சிகளுக்கு அனுமதி கிடைக்கும்.

லியோ படம் பெரிய படம் என்பதால் இடைவேளை நேரத்தை 5 நிமிடமாக குறைக்க திட்டமிட்டு உள்ளோம். தமிழக அரசு சொன்னபடி காலை 9 மணியில் இருந்து நள்ளிரவு 1.30 மணிக்குள் 5 காட்சிகளையும் முடித்துவிடுவோம். ஏற்கனவே முன்பதிவை தொடங்கி விட்டோம். இனி அதை மாற்ற முடியாது. அதனால் 9 மணிக்கு காட்சியை தொடங்க முடிவு செய்துள்ளோம். 19-ந்தேதியன்று (நாளை) மட்டும் இன்னும் முன்பதிவு செய்யவில்லை. அன்றைய தினம் அரசு என்ன உத்தரவிடுகிறதோ அதை செயல்படுத்த தயாராக இருக்கிறோம். அரசு கொடுத்த நேரத்தின்படி படத்தை ஓட்ட தயாராகி விட்டோம். 5 காட்சிகள் திரையிடப் போகிறோம். தயாரிப்பாளர்கள் தரப்பில் காலை 7 மணிக்கு படத்தை தொடங்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் அதை 9 மணிக்கு தொடங்குவதில் என்ன வித்தியாசம் உள்ளது.

காலை 9 மணி என்ற அளவில் முன்பதிவு டிக்கெட் கொடுத்துள்ளோம். அதை மாற்றுவது சரியாக இருக்காது. பிரச்சினை வரும். ஆனாலும் அரசு என்ன அனுமதி கொடுக்கிறதோ அதை செயல்படுத்துவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தநிலையில், லியோ படத்துக்கு காலை 7 மணி காட்சிக்கு அனுமதி இல்லை. அரசாணையின்படி நாளை முதல் 25-ம் தேதி வரை லியோ படத்துக்கு காலை 9 மணி காட்சிகளுக்கே அனுமதி என உள்துறை செயலாளர் அமுதா கூறியுள்ளார்.

# டெல்லி செயற்கை நுண்ணறிவு மாநாட்டிற்கு அழைப்பு; சுந்தர் பிச்சையுடன் மோடி பேச்சு




சென்னை, 18 அக்டோபர் 2023: இந்தியாவில் எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி சூழலை விரிவுபடுத்துவது குறித்து கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சையுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

பிரதமர் மோடி உடன் கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை காணொலி காட்சி வாயிலாக கலந்துரையாடினார். அப்போது, ஹெச்பி உடன் இணைந்து இந்தியாவில் குரோம்புக் அசெம்பிள் செய்யும் பணியில் கூகுள் ஈடுபட்டு வருவதற்காக பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

இந்திய மொழிகளில் செயற்கை நுண்ணறிவு கருவிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஊக்குவித்த பிரதமர் மோடி, சிறந்த நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவு கருவிகளை உருவாக்குவதற்காக பணியாற்றும்படி கூகுள் நிறுவனத்தை கேட்டுக் கொண்டார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் கூகுளின் உலகளாவிய ஃபின்டெக் செயல்பாட்டு மையத்தை நிறுவும் திட்டத்தையும் பிரதமர் மோடி வரவேற்றார்.



மேலும், வரும் டிசம்பர் மாதம் டெல்லியில் இந்தியா நடத்தும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த உச்சி மாநாட்டில் முக்கிய அங்கம் வகிக்கும் வகையில் கூகுளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

அதேபோல் கூகுள்பே மூலம் யுபிஐ சார்ந்து இந்தியாவில் நிதிச் சேர்க்கையை வலுப்படுத்துவது தொடர்பாக, கூகுள் வைத்துள்ள திட்டம் குறித்து தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரதமர் மோடியிடம் எடுத்துரைத்தார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"





**இயக்குநர் அமீரின் தி லா கஃபே உணவக திறப்பு விழாவிற்கு நடிகர் விஜய் சேதுபதி வந்து வாழ்த்து தெரிவித்ததோடு, ரிப்பன் வெட்டி உணவகத்தை திறந்து வைத்தார். தற்போது மகாராஜா என்ற படத்தில் நடித்து வரும் விஜய் சேதுபதி, மெல்லிய மீசையோடு வித்யாசமான கெட்டப்பில் வந்து அசத்தியுள்ளார்.**

# பள்ளிக் குழந்தைகளைக் கவர்ந்து இழுக்கும் “ஷாட் பூட் த்ரீ”



சென்னை, 18 அக்டோபர் 2023: ஷாட் பூட் த்ரீ" திரைப்படம், குழந்தைகள் மத்தியில் ஒரு பெரும் அலையை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தின் திரைக்கதை, கதாப்பாத்திரங்கள், மையக் கருத்து ஆகியவை, குழந்தைகளை மிகவும் கவர்ந்துள்ளன. திரையரங்குகள் அனைத்தும், பள்ளிக் குழந்தைகளால் நிரம்பி வழிகின்றன.

வீட்டை விட அலுவலகத்தில் அதிக நேரம் இருக்கும் பெற்றோரின் மகன் கைலாஷ். தனது தனிமையைப் போக்கிக்கொள்ள, தனக்கு ஒரு தம்பி வேண்டும் என்று பெற்றோரைக் கேட்க, கைலாஷின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. இதனால் கைலாஷ் தன் நண்பர்களுடன் சேர்ந்து மேக்ஸ் என்ற செல்லப் பிராணியை வளர்க்கிறான். தன் தம்பி போன்று கைலாஷ் வளர்க்கும் மேக்ஸ், ஒரு நாள் தொலைந்துவிடுகிறது. தனது செல்லப் பிராணியைத் தேடும் நான்கு சிறுவர்கள் கற்றுக்கொள்ளும் பாடம் தான் இந்த “ஷாட் பூட் த்ரீ.” திரைப்படத்தின் வெற்றிக்குப் பள்ளிகள், முக்கியக் காரணமாகத் திகழ்கின்றன. பள்ளி நிர்வாகத்தினர், “ஷாட் பூட் த்ரீ”யை ஒரு படமாக இல்லாமல், பாடமாகப் பார்க்கிறார்கள். தங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு நல்ல அனுபவம் தரக்கூடிய, சமூகச் சிந்தனை ஊட்டக்கூடிய வாய்ப்பாகப் பார்க்கிறார்கள்.

அக்டோபர் 6 அன்று வெளியான "ஷாட் பூட் த்ரீ", குடும்பங்களுக்கும் இளம் பார்வையாளர்களுக்கும் மனம் வருடும் திரைப்படமாக அமைந்துள்ளது. பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய இந்தப் படம், திரையரங்குகளில் கொண்டாடப்படுகிறது. இந்தத் திரைப்படத்தை அருணாச்சலம் வைத்தியநாதன் எழுதி, இயக்கி, தயாரித்துள்ளார். ஆனந்த் ராகவ் மற்றும் அருணாச்சலம் வைத்யநாதன் ஆகியோரின் கூட்டு முயற்சியில் மனத்தை ஈர்க்கும் திரைக்கதையாக மலர்ந்துள்ளது. சினேகா, வெங்கட் பிரபு, யோகி பாபு ஆகியோருடன் சிவாங்கி, பூவையார், ப்ரணிதி, கைலாஷ் ஹீட் மற்றும் வேதாந்த் வசந்த் ஆகியோர் நடித்துள்ளார்கள். சுதர்சன் சீனிவாசனின் ஒளிப்பதிவு, ஒவ்வொரு நொடியையும் அழகாகப் படம்பிடித்துள்ளது. வீணை மேஸ்ட்ரோ ராஜேஷ் வைத்யாவின் மனத்தை மயக்கும் இசையும், பின்னணி இசையும் காட்சிகளின் உணர்ச்சிகளுக்கு ஆழம் சேர்த்துள்ளன. பரத் விக்ரமனின் படத்தொகுப்பு, சீரான வேகத்துடன் விறுவிறுப்பு கூட்டுகிறது. தயாரிப்பு மேற்பார்வையாளர் முகில் சந்திரனின் அர்ப்பணிப்பும் முயற்சியும் திரைப்படத்துக்கு உயிரூட்டியுள்ளது. நிர்வாகத் தயாரிப்பாளர் வெங்கடேஷ் சடகோபன், துணைத் தயாரிப்பாளர் அருண்ராம் கலைச்செல்வன் ஆகியோரது அசாதாரணப் பங்களிப்பு, படத்திற்குக் கூடுதல் பலம் சேர்த்திருக்கின்றது.

நீங்கள் இன்னும் இந்தத் திரைப்படத்தைப் பார்க்கவில்லை என்றால் இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். “ஷாட் பூட் த்ரீ” இப்போது உங்கள் அருகில் உள்ள திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

# கவர்ச்சிகரமான மானியங்கள், கண்கவர் இலவச படப்பிடிப்பு தளங்கள் மற்றும் பல வசதிகளுடன் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு சிவப்பு கம்பளம் விரிக்கும் மொரிஷியஸ்





சென்னை, 18 அக்டோபர் 2023: மொரீஷியஸ் நாட்டில் படப்பிடிப்புகளை நடத்துவதில் உள்ள எண்ணற்ற நன்மைகள் குறித்து விளக்குவதற்காக மொரீஷியஸ் பொருளாதார மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் இடையேயான கலந்துரையாடல் ஒன்றை இந்திய திரைப்பட தயாரிப்பாளர் கலோல் தாஸ் சென்னையில் நடத்தினார். இந்த நிகழ்ச்சியில் மொரீஷியஸ் நாட்டின் கௌரவ தூதர் மலையப்பன் நாகலிங்கம் மற்றும் தமிழ் திரையுலகின் முன்னணி தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது, படப்பிடிப்புக்கேற்ற அற்புதமான பல இடங்களைக் கொண்ட அழகிய நாடாக மட்டுமல்லாமல், திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு இணையற்ற நன்மைகளையும் மொரீஷியஸ் வழங்குகிறது என்று விளக்கப்பட்டது.

மொரீஷியஸில் படப்பிடிப்பை நடத்துமாறு தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களை வரவேற்ற ஈ டி பி எம் அதிகாரிகள், அங்கு படமாக்கப்படும் திரைப்படங்களின் மொத்த பட்ஜெட்டில் 30-40 சதவிகிதத்தை மானியமாக மொரீஷியஸ் அரசு வழங்கும் என்று தெரிவித்தனர்.

ஏ டி எல் எனப்படும் 'அபோவ் தி லைன்' மானியத் திட்டத்தின் கீழ், நடிகர்கள், இயக்குநர், ஒளிப்பதிவாளர், கலை இயக்குநர், தயாரிப்பு மேலாளர் போன்ற முக்கிய குழுவினருக்கும் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

அதுமட்டுமின்றி, மொரீஷியஸ் அரசுக்கு சொந்தமான பல்வேறு கண்கவர் இடங்களில் இலவசமாக படப்பிடிப்புகளை நடத்திக் கொள்ளலாம். லைன் புரொடக்ஷன் சேவையை கலோல் தாஸ் கவனிப்பார்.

மொரீஷியஸ் அரசின் திரைப்பட மானியச் செயல்முறை மிகவும் எளிமையானது என்று தெரிவித்த அதிகாரிகள், கணக்குகளைச் சமர்ப்பித்த 60 நாட்களுக்குள் மானியம் வழங்கப்படும் என்றும் திட்ட ஒப்புதலுக்கு சுமார் 45 நாட்கள் ஆகும் என்றும் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ் திரைப்பட பிரமுகர்கள், மொரீஷியஸ் அரசு வழங்கும் வசதிகள் மற்றும் நிதியுதவிகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தங்களது படப்பிடிப்புகளை அந்நாட்டில் நடத்த விருப்பம் தெரிவித்தனர்.

# வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் தயாரிப்பில் ஷௌர்யுவ் இயக்கத்தில் நேச்சுரல் ஸ்டார் நானி, மிருணாள் தாக்கூர் நடிக்கும் ‘ஹாய் நான்னா‘ திரைப்படத்தின் உணர்வுப்பூர்வமான டீசர் வெளியீடு



சென்னை, அக்டோபர் 18, 2023: நேச்சுரல் ஸ்டார் நானி மற்றும் மிருணாள் தாக்கூர் முதன்முறையாக ஜோடி சேரும் பான்-இந்தியா திரைப்படமான 'ஹாய் நான்னா' ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் நிலையில், ஞாயிற்றுக்கிழமையை குடும்பத்துடன் கொண்டாடும் ரசிகர்களுக்கான பரிசாக இப்படத்தின் உணர்வுபூர்வமான டீசர் வெளியிடப்பட்டுள்ளது .

நானி மற்றும் கியாரா கண்ணா ஆகியோருக்கு இடையேயான அழகான தந்தை-மகள் கதையாக ஆரம்பிக்கும் இந்த டீசர், பின்னர் நானி மற்றும் மிருணாள் தாக்கூர் ஜோடியின் காதல் கதையை திரையில் காட்டுகிறது. கியாரா உண்மையிலேயே நானியின் மகளா, நானியும் மிருணாளும் இதற்கு முன் சந்தித்துள்ளார்களா, வேறொருவர் உடன் தனக்கு திருமணம் நடக்கவிருக்கும் நிலையில் மிருணாள் ஏன் நானியிடம் தன் காதலை சொல்கிறார் போன்ற கேள்விகளுக்கான விடைகளை தெரிந்து கொள்ள நீங்கள் திரைப்படத்தை பார்க்க வேண்டும்.

பல்வேறு உணர்வுகள் நிறைந்த சவாலான கதையை தனது முதல் படத்திலேயே இயக்குநர் ஷௌர்யுவ் மிகவும் அழகாக கையாண்டுள்ளார் என்பது டீசரில் புலனாகிறது. நானி மற்றும் கியாரா கண்ணாவின் தந்தை-மகள் பந்தம் ஆகட்டும், நானி மற்றும் மிருணாள் தாக்கூர் ஜோடியின் காதல் ஆகட்டும், அனைத்தையும் மிகவும் சிறப்பாக இயக்குநர் சமன் செய்துள்ளார்.

தனது சிறப்பான நடிப்பின் மூலம் நானி நம்மை கவர்கிறார். நீண்ட நாட்களுக்கு பிறகு உணர்வுப்பூர்வமான ஒரு பாத்திரத்தில் அவரை பார்க்க முடிகிறது. சில காட்சிகளில் இளைஞர் ஆகவும் சில காட்சிகளில் நடுத்தர வயது ஆணாகவும் அவர் ஜொலிக்கிறார். தனது இருப்பின் மூலமும் நடிப்பின் மூலமும் காட்சிகளை மிளிர வைக்கிறார் மிருணாள் தாக்கூர்.

சானு ஜான் வர்கீஸ் ஐ எஸ் சி - யின் ஒளிப்பதிவில் ஒவ்வொரு காட்சியும் உயிரோட்டத்துடன் திகழ்கிறது. ஹேஷாம் அப்துல் வஹாப்பின் இசை கதைக்கும் காட்சிகளுக்கும் வலு சேர்க்கிறது. அவினாஷ் கோலாவின் தயாரிப்பு வடிவமைப்பும் குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தை பெரும் பொருட்செலவில் வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் பேனரில் மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா தயாரிப்பதால் காட்சிகளின் பிரம்மாண்டம் கண்களை கவர்கிறது.

மொத்தத்தில் மிகவும் சுவாரஸ்யமாக அமைந்துள்ள இந்த டீசர் திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை வெகுவாக அதிகரிக்கிறது.

முழு நீள குடும்ப படமான 'ஹாய் நான்னா', பிரவீன் அந்தோணியின் படத்தொகுப்பில் உருவாகிறது. சதீஷ் ஈ வி வி நிர்வாக தயாரிப்பாளர் ஆவார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஒரே சமயத்தில் பான்-இந்தியா திரைப்படமாக இந்த ஆண்டு டிசம்பர் 7 அன்று 'ஹாய் நான்னா' வெளியாகிறது.

படக்குழுவினர்:

நடிகர்கள்: நானி, மிருணால் தாக்கூர், பேபி கியாரா கண்ணா இயக்கம்: ஷௌர்யுவ் தயாரிப்பு: மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா

தயாரிப்பு நிறுவனம்: வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் ஒளிப்பதிவு: சானு ஜான் வர்கீஸ் இசை: ஹேஷாம் அப்துல் வஹாப் தயாரிப்பு வடிவமைப்பு: அவினாஷ் கொல்லா படத்தொகுப்பு: பிரவீன் அந்தோணி நிர்வாகத் தயாரிப்பாளர் - சதீஷ் ஈ.வி.வி ஆடை வடிவமைப்பாளர்: ஷீத்தல் ஷர்மா மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

# கோபுரம் பிலிம்ஸ் ஜி.என். அன்புசெழியன் பிரம்மாண்ட தயாரிப்பில் சந்தானம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம்



சென்னை, அக்டோபர் 18, 2023: ஜி. என். அன்புசெழியனின் கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம், 'வெள்ளைக்கார துரை', 'தங்கமகன்' 'மருது', 'ஆண்டவன் கட்டளை', உள்ளிட்ட வெற்றி படங்களை தொடர்ந்து சந்தானம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றை பிரம்மாண்டமான பொருட்செலவில் தயாரிக்கிறது.

அனைத்து இளைஞர்களும் ரசித்து கொண்டாடும் விதமாக சந்தானத்தின் கதாபாத்திரம் உருவாகியுள்ளது. மேலும், சந்தானத்தின் ரசிகர்கள் கொண்டாடும் வகையில் படம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

சந்தானத்தின் ஜோடியாக பிரியாலயா கதாநாயகியாக அறிமுகமாகிறார். முக்கிய வேடத்தில் தம்பி ராமையாவும், சுவாரஸ்யமான வேடத்தில் மனோபாலாவும் நடித்துள்ளனர். இவர்களுடன், முனீஷ்காந்த், விவேக் பிரசன்னா, பால சரவணன், மாறன், கூல் சுரேஷ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

பல வெற்றி படங்களுக்கு கதை, வசனம் எழுதிய எழிச்சூர் அரவிந்தன் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். டி. இமானின் இசையில் மூன்று பாடல்கள் மிக சிறப்பாக வந்துள்ளன. பாடல் வரிகளை இயக்குநர் விக்னேஷ் சிவன் மற்றும் முத்தமிழ் எழுதியுள்ளனர்.

ஒளிப்பதிவு - ஓம் நாராயண் எடிட்டிங் - எம். தியாகராஜன்

கலை - எம். சக்தி வெங்கட்ராஜ் ஸ்டண்ட் - மிராக்கிள் மைக்கேல்.

பிரமாண்டமான பாடல் காட்சிகளுக்கு நடனம் அமைத்து இயக்கியுள்ளனர் பிருந்தா - பாபா பாஸ்கர்.

சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. முழுவீச்சில் இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், இப்படத்தின் டைட்டில், ஃபர்ஸ்ட் லுக் மற்றும் வெளியிடும் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளன.

கதையம்சத்தோடு நகைச்சுவை கலந்த கமர்ஷியல் பிரம்மாண்ட படைப்பாக உருவாகும் இப்படத்தை ஆனந்த் நாராயண் இயக்குகிறார். தயாரிப்பு: கோபுரம் பிலிம்ஸ் ஜி.என். அன்புசெழியன்.

# "ஆதிஷ் ஒரே மனதாக டைகரையும் அவருடைய குடும்பத்தையும் அழிக்க விரும்புகிறான்" ; டைகர்-3 படத்தில் தனது அச்சுறுத்தும் கதாபாத்திரம் குறித்து விவரிக்கும் இம்ரான் ஹாஸ்மி




சென்னை, அக்டோபர் 18, 2023: 'டைகர்-3'யில் இம்ரான் ஹாஸ்மி நடிப்பதை ஒரு பெரிய ரகசியமாகவே வைத்திருந்தார் ஆதித்யா சோப்ரா. படத்தின் பிளாக்பஸ்டர் டிரைலரை பார்த்த பின்னர் அது ஏன் என்பதை நாம் தெரிந்து கொள்வோம். யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் வரிசையில் லேட்டஸ்ட்டாக உருவாகியிருக்கும் 'டைகர் 3'யில் ஒரு சூப்பர் ஏஜென்ட் ஆன டைகர் என்கிற அவினாஷ் சிங் ரத்தோரின் கொடூரமான வில்லனாக, இம்ரான் ஒரு மிகப்பெரிய சர்ப்ரைஸ் தான். பெருமூளை என இம்ரானை விவரிக்கும் விதமாக இரக்கமற்ற கூலித்தொழிலாளியாக தந்திரமான கதாபாத்திரம் அவருடையது.. அவனது மனம் தான் அவனது மிகப்பெரிய ஆயுதம். மேலும் அவன் நாட்டை சுற்றியுள்ள அதிகாரிகள் மீது மகத்தான சக்தியை பயன்படுத்துகிறான்.

மேலும் இம்ரான் டைகர்-3யில் தனது கதாபாத்திர பெயர் குறித்தும் தெரிவிக்கிறார். அவர் கூறும்போது, "ஆத்திரத்தால் தூண்டப்பட்ட மற்றும் டைகரை அழிப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய ஒரு மனிதனான ஆதிஷை உருவாக்குவதார்காக மிகச்சிறந்த நேரத்தை நான் பெற்றிருந்தேன். ஹிந்தி சினிமாவிலேயே அரிதான ஒரு தனித்துவமான வித்தியாசமான வில்லனாக நான் நடித்திருக்கிறேன். அவன் தான் 'பெரு மூளை', அவனது மனம் தான் மிகப்பெரிய ஆயுதம் மற்றும் அவனது வஞ்சகமான திட்டங்களை செயல்படுத்துவதற்காக நாட்டை சுற்றியுள்ள அதிகாரிகள் மீது மகத்தான சக்தியை பயன்படுத்துகிறான்.

மேலும் இம்ரான் கூறும்போது, "அவன் ஒரே மனதாக டைகரையும் அவரது குடும்பத்தையும் அழிக்க விரும்புகிறான். அதை செய்வதன் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய சூப்பர் ஏஜென்ட்டை இல்லாமல் செய்ய விரும்புகிறான். இந்தியாவுக்காக கடைசி வரை நிற்கும் மனிதனாக டைகர் இருப்பார் என்பது அவனுக்கு தெரியும் என்பதால் எந்த விலை கொடுத்தேனும் அவரை இல்லாமல் செய்வதற்கு அவன் விரும்புகிறான்" என்கிறார்.

'டைகர் 3' டிரைலர் ஆன்லைனில் வெளியானதை தொடர்ந்து நேற்று முதல் இம்ரான் ஹாஷ்மி வில்லனாக மாறியது ஒரு மனதாக பாராட்டப்பட்டு வருகிறது. யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸில் வில்லனாக இருப்பதற்காக மகிழ்ச்சியடைவதாக இம்ரான் கூறுகிறார்.. மேலும் இம்ரான் கூறும்போது, "யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸின் வில்லன்கள் துருப்புச்சீட்டுக்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் உங்களை ஆச்சர்யத்தால் அசத்தியுள்ளனர். மேலும் என்னுடைய கதாபாத்திரம் ரசிகர்களை ஆச்சர்யத்தால் பிடித்து இழுக்க வேண்டும் என விரும்பிய ஆதித்ய சோப்ரா அதில் தெளிவாக இருந்தார். அதனால் தான் படம் முடியும் வரை என்னை மறைத்து வைக்கும் விதமான விரிவான திட்டமும் உருவாக்கப்பட்டது" என்கிறார்

மேலும், "டைகர் 3 பற்றி மக்களுக்கு சொல்வதற்காக நான் துடித்துக்கொண்டிருந்தேன்.. அப்படி என் கதாபாத்திரம் குறித்து மக்களிடம் வெளிப்படுத்தினால் அது உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மிக நன்றாகவே தெரியும் என்பதால் அப்படி செய்ய முடியவில்லை.. டைகர் 3 டிரைலர் வெளியாகும்போதுதான் வில்லனை வெளிச்சத்திற்கு கொண்டுவரவேண்டும் என்கிற முடிவில் தெளிவாக இருந்தோம். அதற்கேற்ப ரசிகர்கள் தற்போது எனது அச்சுறுத்தும் இந்த திருப்பத்தை நேசிக்கின்றார்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சி" என்கிறார் இம்ரான்.

வில்லன்கள் எப்போதுமே மறக்க முடியாத கதாபாத்திரங்களை உருவாக்க வேண்டும்.. அவை மக்களால் நீண்ட காலத்திற்கு நினைவில் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதை இம்ரான் எப்போதும் உணர்ந்தே இருக்கிறார். அவர் கூறும்போது, "எந்த ஒரு விதிமுறைகளை பற்றியும் கவலைப்படாத ஒருவனை பற்றி சொல்கிறோம் என்பதால் எப்போதுமே வில்லன்களாக நடிப்பதற்கு ஜாலியாகத்தான் இருக்கும். பதிலாக அவர்கள் தங்களுக்கென தனி விதிகளை உருவாக்குவார்கள். அதனால் இந்த வாய்ப்பு வந்ததும் அந்தப்பக்கம் தாவிவிட்டேன். ஏனென்றால் மக்கள் நீண்டகாலத்திற்கு ஞாபகத்தில் வைத்திருக்க கூடிய ஒரு வில்லனை உருவாக்குவதற்கான சுதந்திரத்தை நான் பெற்றிருக்கிறேன் என்பது எனக்கு தெரியும்" என்கிறார்.

மேலும், "ஒரு வழிகாட்டியாக இருந்து இந்த ஆதிஷ் கதாபாத்திரத்திற்கு உயிர்கொடுக்க உதவியதற்காக இயக்குநர் மனீஷ் சர்மாவுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு கொடுக்கப்பட்ட இந்த கதாபாத்திரம் அவரது தொலைநோக்கு பார்வையில் உருவானது தான். நான் பெருமிதப்படும் விதமாக ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கியதில் எனக்கு அவர் உதவி புரிந்திருக்கிறார்" என்கிறார் இம்ரான்.

சல்மான்கான், கத்ரீனா கைப், நடித்துள்ள 'டைகர் 3' வரும் நவ-12, ஞாயிறு அன்று தீபாவளி வெளியீடாக ரிலீஸாக இருக்கிறது. அதிரடியான ஆக்சன் காட்சிகளை கொண்ட இப்படத்தை கண்கவரும் விதமாக இயக்கியுள்ளார் மனீஷ் சர்மா.

# ஷாட் பூட் த்ரீ பட நடிகை கோமல் சர்மாவுக்கு விலங்குகள் நல அமைப்பை சேர்ந்தவர்கள் பாராட்டு




சென்னை, அக்டோபர் 13 2023: இயக்குநர் அருண் வைத்தியநாதன் இயக்கத்தில் சமீபத்தில் ஷாட் பூட் த்ரீ என்கிற படம் வெளியானது. குழந்தைகளுக்கும் செல்லப்பிராணிகளுக்குமான அன்பை மையப்படுத்தி உருவாகியிருந்த இப்படத்தில் மிக முக்கியமான கதாபாத்திரம் ஒன்றில் நடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார் நடிகை கோமல் சர்மா.

தமிழில் எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கிய சட்டப்படி குற்றம் என்கிற படத்தில் அறிமுகமான கோமல் சர்மா, அதன்பிறகு ஷாஜி கைலாஷ் இயக்கத்தில் ஆர்கே நடித்த வைகை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட சில படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தார்.. இப்போது வெளியாகி உள்ள ஷாட் பூட் த்ரீ படத்தில் இவரது நடிப்பிற்காக பல இடங்களில் இருந்தும் பாராட்டுக்கள் கிடைத்து வருகின்றன. குறிப்பாக விலங்குகள் நல அமைப்பாளர்கள் பலரும் இவரை அழைத்து பாராட்டி வருவது தான் ஆச்சரியமான ஒன்று.. இந்த படத்தில் நடித்த அனுபவங்கள் குறித்தும் தற்போது கிடைத்து வரும் பாராட்டுக்கள் குறித்தும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறார் கோமல் சர்மா.


"இந்த படம் குழந்தைகளையும் விலங்குகளையும் மையப்படுத்தி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகியுள்ள படம். பொதுவாகவே எனக்கு விலங்குகள் என்றால் மிகவும் பிடிக்கும். அவைகளுக்கான ஒரு குரலாக இந்த படத்தின் மூலம் மாறியது எனக்கு மகிழ்ச்சி. அதுமட்டுமல்ல பிரபல இசை கலைஞர் ராஜேஷ் வைத்யா இசையில் உருவான இந்த படத்தில் நடித்ததும் இன்னொரு மிகப்பெரிய மகிழ்ச்சி. ஒவ்வொரு காட்சியையும் அவர் தனது இசையால் கவிதையாக மாற்றி இருந்தார்.. மாநாடு படத்தில் வெங்கட்பிரபு டைரக்சனில் நடிக்க வாய்ப்பு தேடி வந்து சில காரணங்களால் அது மிஸ் ஆனது. ஆனால் இந்த படத்தில் அவருடன் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது இன்னொரு சந்தோசம். அவருக்குள் ஒரு மிகச்சிறந்த நடிகர் இருக்கிறார் என்பதை நேரடியாகவே பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த படத்தில் பஞ்சாபி கலந்த தமிழ் பேசும் பெண்ணாக நடித்துள்ளேன். அருண் வைத்தியநாதன் இதில் நடித்த எல்லோருக்குமே தனித்தனி உடல் மொழியை கொடுத்து நடிக்க வைத்தார். இந்த படத்திற்காக படப்பிடிப்பிலேயே முதன்முதலாக லைவ் ஆக பேசி நடித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. நான் ஒரு தியேட்டர் ஆர்டிஸ்ட் என்பதால் எனக்கு இது எளிதாகவும் இருந்தது.

இப்போது இருக்கும் குழந்தைகளிடம் நடிப்பு குறித்த தெளிவு, சின்சியாரிட்டி எல்லாமே இருக்கின்றன. இந்த படம் பார்த்துவிட்டு குழந்தைகள் தங்கள் வீட்டில் இருக்கும் ஒரு பெண்ணாக என்னை நினைக்கிறார்கள். பல குழந்தைகள் என்னை பார்பி டால் ஆகவே கருதுகிறார்கள். இந்த படம் மட்டுமல்ல இதேபோன்று குழந்தைகளை மையப்படுத்தி மலையாளத்தில் நடிகர் மோகன்லால் இயக்கியுள்ள பரோஸ் படத்தில் நான் நடித்தபோது கூட என்னை துணிக்கடையில் இருக்கும் பொம்மை என்று சிலர் நினைத்த நகைச்சுவை நிகழ்வுகளும் நடந்தன.

ஷாட் பூட் த்ரீ படம் பார்த்துவிட்டு விலங்குகள் நல அமைப்பிலிருந்து பலரும் என்னை தொடர்பு கொண்டு பாராட்டினார்கள். இது குறித்து மேற்கொண்டு ஆக்கப்பூர்வமான விஷயங்கள் எதுவாக இருந்தாலும் எனக்கு ஆதரவு தருவதாகவும் தெரிவித்துள்ளனர். இதுநாள் வரை இந்த விஷயங்களை சைலன்ட்டாக செய்து வந்தேன். தற்போது கிடைத்துள்ள இந்த வரவேற்பு மற்றும் ஆதரவால் விலங்குகளுக்கான பாதுகாப்பு மற்றும் நல விஷயங்களை இன்னும் வெளிப்படையாகவே செய்ய முயற்சி எடுக்கப் போகிறேன்.

ஷாட் பூட் த்ரீயை தொடர்ந்து அடுத்ததாக தமிழில் நான் நடித்துள்ள பப்ளிக் என்கிற படம் வெளியாக இருக்கிறது. மலையாளத்தில் மோகன்லால் உடன் நடித்துள்ள பரோஸ் திரைப்படம் டிசம்பர் 21 ஆம் தேதி வெளியாகிறது. இது தவிர மலையாளத்தில் இரண்டு படங்களிலும் ஹிந்தியில் ஒரு படத்திலும் நடித்து வருகிறேன். விரைவில் அந்த படம் குறித்த அறிவிப்புகள் வெளியாக இருக்கின்றன" என்று கூறினார் கோமல் சர்மா.

# பாலகிருஷ்ணா நடிக்கும் 'பகவந்த் கேசரி' திரைப்படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை பெற்றுள்ள நாக்ஸ் ஸ்டுடியோஸ்



சென்னை, 18 அக்டோபர் 2023: சென்னையை சேர்ந்த தயாரிப்பு நிறுவனமான நாக்ஸ் ஸ்டுடியோஸ் திரைப்பட தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது.

நாக்ஸ் ஸ்டுடியோஸ் அதன் முதல் வெளியீடாக பாலகிருஷ்ணா, காஜல் அகர்வால், அர்ஜுன் ராம்பால், மற்றும் ஸ்ரீலீலா ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள தெலுங்கு திரைப்படமான 'பகவந்த் கேசரி'யின் தமிழ்நாடு திரையரங்கு வெளியீட்டு உரிமையை பெற்றுள்ளது. இத்திரைப்படம் வரும் அக்டோபர் 19 அன்று வெளியாகிறது. தமிழில் முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து நடிக்கும் அதிரடி ஆக்ஷன் திரைப்படம் குறித்த அறிவிப்பையும் நாக்ஸ் ஸ்டுடியோ விரைவில் வெளியிட உள்ளது. தரமான பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட சிறந்த திரைப்படங்களை தமிழ் ரசிகர்களுக்கு வழங்குவதே நாக்ஸ் ஸ்டுடியோவின் நோக்கமாகும். நாக்ஸ் ஸ்டுடியோவின் இதர திரைப்படங்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்.

பிரபல தெலுங்கு இயக்குநர் அனில் ராவிப்பூடி இயக்கத்தில் உருவாகியுள்ள 'பகவந்த் கேசரி' திரைப்படத்தின் அதிரடி டிரைலர் ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பை உருவாக்கி உள்ள நிலையில் இப்படத்தை அக்டோபர் 19 அன்று தமிழகம் எங்கும் உள்ள திரையரங்குகளில் வெளியிட நாக்ஸ் ஸ்டுடியோ தயாராகி வருகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## பெர்ஃபிட்-ஆர் முழங்கால் அமைப்பு மொத்த முழங்கால் மாற்று சிகிச்சையில் புரட்சி
# 200 அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளது
# சௌந்தரபாண்டியன் எலும்பு மற்றும் கூட்டு மருத்துவமனை

சென்னை, அக்டோபர் 18, 2023: சௌந்தரபாண்டியன் எலும்பு மற்றும் கூட்டு மருத்துவமனையானது அனைத்து மேம்பட்ட எலும்பியல் சிகிச்சை நடைமுறைகளுக்கு சென்னையில் உள்ள ஒரு முன்னணி மையமாகும்.

கடந்த ஆண்டு இந்த மருத்துவமனை'பெர்ஃபிட்-ஆர்முழங்கால் அமைப்பு சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியது. தற்போது இந்த மருத்துவமனை 200 பெர்ஃபிட்-ஆர் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளது மற்றும் முடிவுகள் சிறப்பாக உள்ளன. நோயாளிகள் இப்போது முழங்காலின் முழு அளவிலான இயக்கங்களை விரைவாக மீட்டெடுக்கிறார்கள் மற்றும் மிகக் குறைவான வலியைக் கொண்டுள்ளனர்.




சௌந்தரபாண்டியன் எலும்பு மற்றும் கூட்டு மருத்துவமனை நிர்வாக இயக்குனர், மூட்டு மாற்று நிபுணர் டாக்டர் சிவமுருகன், கூறுகையில், கீல்வாதம் என்பது எலும்பு தேய்மானம் ஆகும். மருந்து மற்றும் பிசியோதெரபி உதவாதபோது, நமது வழக்கமான வாழ்க்கைக்குத்திரும்புவதற்கு மொத்த முழங்கால் மாற்று சிகிச்சையே சிறந்த வழி. சௌந்தரபாண்டியன் எலும்பு மற்றும் கூட்டு மருத்துவமனை1987 ஆம் ஆண்டு முதல் சென்னையில் மொத்த முழங்கால் மாற்று சிகிச்சையில் முன்னோடியாக உள்ளது. நாங்கள் 8000 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்துள்ளோம். நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் வசதியை மனதில் வைத்து நாங்கள் எப்போதும் புதுமைகளை உருவாக்கி மேம்படுத்தி வருகிறோம். 2018 ஆம் ஆண்டில், இந்தமொத்த முழங்கால் மாற்று சிகிச்சைக்கு உட்பட்ட நோயாளிகளுக்கு விரைவான நோய் குணப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தினோம். இந்த நுட்பத்தின் மூலம்நோயாளிகள் அறுவை சிகிச்சையின் அதே நாளில் நடந்துகொண்டிருந்தனர். கடந்த ஆண்டு பெர்ஃபிட்-ஆர்முழங்கால் அமைப்பு முறையை அறிமுகப்படுத்தினோம் "கடந்தகாலத்தில்மொத்த முழங்கால் மாற்று சிகிச்சை செய்து கொண்ட பல நோயாளிகள்'இப்போது என்னால் வலியின்றி நடக்க முடியும் ஆனால் இது என் முழங்கால்அல்ல' என்று கூறுவார்கள். " பெர்ஃபிட்-ஆர் முழங்கால் அமைப்புமுழுகாலின் சிடி ஸ்கேன் படத்தைப் பயன்படுத்தி 3 பரிமாண [3டி] அறுவை சிகிச்சை திட்டமிடல் ஆகும். இந்த 3 பரிமாண படங்களின் முழுமையான பகுப்பாய்வு, மூட்டுவலியால் ஏற்படும் குறைபாடுகள் பற்றிய நமது புரிதலையும் பகுப்பாய்வுகளையும்மேம்படுத்தியுள்ளது. இந்த 3டி படங்களைப் பயன்படுத்தி முழங்காலின் இயற்கையான சீரமைப்பைத் துல்லியமாக இப்போது தீர்மானிக்க முடியும். இந்த மேம்பட்ட மென்பொருளைப்பயன்படுத்தி நோயாளியின் குறிப்பிட்ட வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு கணினித் திரையில் ஒரு மெய்நிகர் செயல்பாடுசெய்யப்படுகிறது. பெர்ஃபிட்-ஆர் முழங்கால் அமைப்பு உண்மையில் மொத்த முழங்கால் மாற்று சிகிச்சையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த புதிய தொழில்நுட்பத்தின் நன்மைகள் பின்வருமாறு தொடைஎலும்பு மற்றும் திபியாவின் 3டி மாதிரிகள் உருவாக்கப்பட்டு, துல்லியமான அளவீடுகள் மற்றும் காலின் சீரமைப்பு ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, நோயாளியை மூட்டுவலிக்கு முந்தைய நிலைக்கு மீட்டமைக்க, மேம்பட்ட 3டி- ஐப் பயன்படுத்தி நோயாளியைமீட்டெடுக்க சரியான அறுவை சிகிச்சைக்கு முந்தைய திட்டம் திட்டமிடப்பட்டுள்ள மென்பொருள்.இயற்கையான அச்சு சீரமைப்பைக் காட்டும் பெர்ஃபிட்-ஆர் முழங்கால் அமைப்பு முறையைப் பயன்படுத்தி மொத்த முழங்கால் மாற்று சிகிச்சை செய்ய படுகிறது கணினித்திரையில் ஒரு மெய்நிகர் செயல்பாடுசெய்யப்படுகிறது, எனவே திட்டமிடப்பட்ட அறுவைசிகிச்சையின் போது எந்த ஆச்சரியமும்இல்லை. ஒன்று அசாதாரண அளவுகள் மற்றும் சிறப்பு உள்வைப்புகள் தேவைப்படும் மொத்தமாக மாற்றப்பட்ட உடற்கூறியல் ஆகியவற்றிற்காகத் தயாரிக்கப்படுகிறது.

இந்த நோயாளி குறிப்பிட்ட வழிகாட்டிகள் ஆட்டோகிளேவ் செய்யப்பட்டு அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படுகின்றன. இது வழக்கமானகருவிகளின் தேவையைத் தவிர்க்கிறது மற்றும் செயல்பாட்டின் துல்லியம் பெரிதும் மேம்படுத்தப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்ய எடுக்கும் நேரம் வெகுவாகக் குறைக்கப்படுகிறது. முழங்காலின் குறைந்தபட்ச வெளிப்பாடு மட்டுமே தேவைப்படுகிறது, அறுவைசிகிச்சை நேரம் வெகுவாகக் குறைக்கப்படுவதால் தொற்று போன்ற அறுவை சிகிச்சைக்குப் பின் ஏற்படும் சிக்கல்கள்குறைவு.

இரண்டுமுழங்கால்களிலும் ஒரே நேரத்தில் மொத்த முழங்கால் மாற்று சிகிச்சை மிகவும்பாதுகாப்பாகச் செய்யப்படலாம் மற்றும் சிக்கலான குறைபாடுகள் உள்ள நோயாளிகள் மற்றும்ஏற்கனவே இரத்தப்போக்கு போக்கு உள்ள நோயாளிகள் தனிப்பயன்ஜிக்ஸைப் பயன்படுத்துவதன் மூலம் பெரிதும் பயனடைவார்கள். இப்போது பெர்ஃபிட்-ஆர் முழங்கால் அமைப்பு மூலம் நோயாளிகள் தங்களின் தனித்துவமான பாணியில் நடக்கவும், ஓடவும் மற்றும் விளையாடவும் உதவும் தனிப்பயனாக்கப்பட்ட பொருத்தத்தின் கூடுதல் நன்மையுடன் மொத்த முழங்கால் மாற்றத்தின் அனைத்து முந்தைய நன்மைகளையும் எதிர்பார்க்கலாம், என்கிறார் டாக்டர் சிவமுருகன்.

# 25 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் கார்த்தி ரசிகர்கள்
## தயாரிப்பாளர் எஸ் ஆர் பிரபு - இயக்குநர் ராஜு முருகன் தொடங்கி வைத்த தினசரி உணவு வழங்கும் திட்டம்

சென்னை, 18 அக்டோபர் 2023: கார்த்தி நடிப்பில் 25 ஆவது படமாக தயாராகி இருக்கும் 'ஜப்பான்' திரைப்படத்தை கொண்டாடும் வகையில் அவருடைய ரசிகர்கள் தொடர்ந்து 25 நாட்களுக்கு, தினசரி ஆயிரம் பேர் வீதம், 25 ஆயிரம் மக்களுக்கு அன்னதானத்தை வழங்குகிறார்கள். கார்த்தி மக்கள் நல மன்றம் சார்பில் தொடங்கப்பட்டிருக்கும் இந்த தினசரி அன்னதானத் திட்டத்தை 'ஜப்பான்' படத்தின் தயாரிப்பாளரான எஸ் ஆர் பிரபுவும், அப்படத்தின் இயக்குநரான ராஜுமுருகனும் இணைந்து தொடங்கி வைத்தனர். இதன்போது கார்த்தி மக்கள் நல மன்றத்தின் அகில இந்திய செயலாளர் உள்ளிட்ட மாநில நிர்வாகிகளும், மாவட்ட தலைவர்களும் உடனிருந்தனர். நடிகர் கார்த்தி நடிப்பில் தயாராகி வரும் 25 வது திரைப்படம் 'ஜப்பான்'. இதனை முன்னிட்டு 25 ஆயிரம் மக்களுக்கு உணவு வழங்க வேண்டும் என நடிகர் கார்த்தி விருப்பம் தெரிவித்தார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் கார்த்தி மக்கள் நல மன்றம் மற்றும் உழவன் அறக்கட்டளை சார்பில் ஒரே நாளில் 25 ஆயிரம் பேருக்கு உணவு






வழங்குவதை விட, தொடர்ந்து 25 நாட்களுக்கு நாள்தோறும் ஆயிரம் பேருக்கு உணவு வழங்க திட்டமிட்டனர்.

அக்டோபர் 17ஆம் தேதி தொடங்கி, 'ஜப்பான்' திரைப்படம் வெளியாகும் நவம்பர் 10ஆம் தேதி வரை இந்த உணவு வழங்குவது தொடரும் என்று கார்த்தி ரசிகர் மன்றத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். இதன் போது சென்னையில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு நாள்தோறும் ஆயிரம் மக்களுக்கான சுவையான உணவினை பரிமாறவிருக்கிறார்கள்.

பசித்த வயிறுக்கு உணவிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கும் இந்த திட்டத்தை கண்டு.. யாரேனும் ஒருவர் பசித்த ஒருவருக்கு உணவு வழங்கினாலும் கார்த்தியின் நோக்கம் வெற்றி பெறும் என கார்த்தி மக்கள் நல மன்ற நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அக்டோபர் 17ஆம் தேதி சென்னையில் உள்ள தி. நகர் பகுதியில் கார்த்தி மக்கள் நல மன்றத்தின் அகில இந்திய செயலாளர் வீரமணி, மாநில நிர்வாகிகள், சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர் மாவட்ட தலைவர்கள் ஆகியோர் உடனிருக்க.. 'ஜப்பான்' படத்தின் தயாரிப்பாளர் எஸ். ஆர். பிரபு மற்றும் இயக்குநர் ராஜுமுருகன் ஆகியோர் ஆயிரம் பேருக்கு சுவையான வழங்கும் திட்டத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திர நடிகரான கார்த்தி நடிக்கும் 25 வது படமான 'ஜப்பான்' படத்தின் வெற்றிக்காக.. 25 நாட்கள் 25 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கும் உன்னத திட்டத்தை முன்னெடுத்ததற்காக திரையுலகினரும், ரசிகர்களும் கார்த்தி மற்றும் அவருடைய மக்கள் நல மன்றத்தினருக்கு வாழ்த்துகளை தெரிவித்திருக்கிறார்கள்.

## அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் - விவசாயிகளின்
# வருமானத்தை இரட்டிப்பாக்குவது குறித்த ஒரு நாள் தேசிய மாநாடு

சென்னை, அக்டோபர் 18, 2023: அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, பொருளாதாரத் துறையின் முதுகலை மற்றும் ஆராய்ச்சித் துறை, இந்தியப் பொருளாதார சங்கத்துடன் இணைந்து, 'விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் மிகையா அல்லது உண்மையா' என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தது . இந்தியப் பொருளாதார சங்கத்தின் மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் ஆத்யா பிரசாத் பாண்டே அவர்கள் மாநாட்டுத் தலைமையேற்க, விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் முக்கிய இலக்கினை அடைவதற்கான பல்வேறு பரிமாணங்கள் குறித்து மாநாட்டில் கலந்தாலோசிக்கப்பட்டது. பெங்களூர், 'அசீம் பிரேம்ஜிபல்கலைக்கழகத்தின் ' பேராசிரியர் டாக்டர் மஞ்சுளா மேனன் மற்றும் கோழிக்கோடு , ஜமோரின் குருவாயூரப்பன் கல்லூரியின் , உதவிப் பேராசிரியர் டாக்டர் ரெம்மியா ராஜன், இந்தியப் பொருளாதார சங்கத்தின் தென் மண்டல இணைச் செயலாளர் ஆகிய துறைசார் வல்லுநர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.



இந்த மாநாட்டில், நாடு முழுவதிலுமுள்ள பிற கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற பொருளாதாரப் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களின் 66 ஆய்வுக் கட்டுரைகள் மேற்கூறிய தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த மாநாடு விவசாயிகளின் வருமான அளவை இரட்டிப்பாக்கும் பொருட்டு , மத்திய மற்றும் மாநில அரசுகளால் தொடங்கப்பட்ட உத்திகள் மற்றும் மாற்று நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தக் கூடிய ஒரு தளமாக செயல்பட்டது. விவசாய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான சிறந்த கொள்கைகளைக் கண்டறிவது, தமிழக விவசாயிகளின் வருமான அளவை இரட்டிப்பாக்குவதில் மாநில அரசு அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டறிவது ஆகியவையே மாநாட்டின் மையப் பொருளாக அமைந்திருந்தன.

தொடக்க உரையின் போது, இந்தியப் பொருளாதார சங்கத்தின் மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் ஆத்யா பிரசாத் பாண்டே பேசுகையில், "விவசாயம் நமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், இலட்சக் கணக்கான கடின உழைப்பாளிகளின் வாழ்வாதாரமகவும் விளங்குகிறது. ஆனால், உண்மை என்னவெனில், நமது விவசாயிகள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் திணறி வருகின்றனர். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது என்பது அடுத்தடுத்த அரசாங்கங்களால் வழங்கப்பட்ட வாக்குறுதியாக விளங்கும் இத்தருணத்தில், இந்தச் சிக்கலான பிரச்சினையைச் சுற்றி நிலவும் மிகைத்தன்மை மற்றும் உண்மைத் தன்மையையும் நாம் ஆராய வேண்டிய நேரமாகவும் இது உள்ளது." என்ற தன் கருத்தை வெளியிட்டார்.

" விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது முடியாத காரியம் என்பது உண்மையல்ல. விவசாயத் துறையானது இயல்பாகவே நிலையற்றதும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்றும் சிலர் வாதிடுகின்றனர். அப்படியாயின் அவற்றின் தாக்கத்தைத் தணிக்க நவீன விவசாயத்தில் முதலீடு செய்வது போன்ற உயிர்ப்புடைய நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்று அர்த்தமில்லை. தொழிலாளர்களுக்கு பணிவாய்ப்பைக் கொடுப்பதில் விவசாயம் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. (2021-22 இல் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் கணக்கெடுப்பின்படி 45.5% தொழிலாளர்களுக்கு விவசாயத்தின்வழி பணிவாய்ப்பு). எனவே, விவசாயத்தில் கவனம் செலுத்துவதே ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் கணிசமான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான சரியான வழியாகும்," என்று பேராசிரியர் பாண்டே மேலும் கூறினார்.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் செயலாளர் உதன் குமார் சோர்டியா அவர்கள் கூறுகையில், "விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவது போன்ற இன்றியமையாத சிக்கல்கள் குறித்து விவாதிப்பதிலும் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் தங்கள் பங்கினை அளிப்பதற்கு எங்கள் நிறுவனம் முனைப்புடன் உள்ளது. எங்களின் இச்செயல்பாடுகள் எதிர்காலத்தில் விவசாயத் துறையில் மாறுதலை ஏற்படுத்துவதற்கு மிகப் பெரும் உந்துசக்தியாக விளங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்.

அகர்சந்த் மன்முல் ஜெயின் கல்லூரியின் முதல்வர் டாக்டர் என் வெங்கடரமணன், மாநாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு கல்வியின் தரத்தை முன்னேற்றுவதற்கும் கல்வி முன்னேற்றத்திற்கு நிறுவனம் அளித்து வரும் மிகப்பெரும் ஆதரவினையும் அடிக்கோடிட்டுக் காட்டினார். பொருளாதாரத் துறையின் தலைவரும், மாநாட்டின் அழைப்பாளருமான டாக்டர் வி எஸ் முரளி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த துறைசார் வல்லுநர்களை அன்புடன் வரவேற்றார். கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஜே.எஸ்.சிந்து மாநாட்டின் அவசியத்தை விளக்கினார். இந்த நிகழ்வின் போது, கருத்தரங்க சாரத்தை உள்ளடக்கிய புத்தகத் தொகுதி ஒன்றும் வெளியிடப்பட்டது. தேசிய மாநாடு விவசாயத் துறை சார்ந்து நிலவி வரும் தவறான எண்ணங்களை அகற்றுவது மற்றும் விவசாயத் துறையின் சிக்கல்களை வழிநடத்துவது குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தது.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, கருத்தாடல்களின் வழி விவசாயத் துறையின் செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக உள்ளது, மேலும் இது போன்ற ஒருங்கிணைந்த கருத்தரங்கின் மூலம் நமது விவசாயிகளின் வளமான எதிர்காலத்தை வடிவமைக்கும் நோக்கில் கலந்துரையாடல்களை முன்வைப்பதில் ஆர்வமுடன் உள்ளோம்.

## "ஆதிஷ் ஒரே மனதாக டைகரையும் அவருடைய குடும்பத்தையும் அழிக்க விரும்புகிறான்" ;
## டைகர்-3 படத்தில் தனது அச்சுறுத்தும் கதாபாத்திரம் குறித்து விவரிக்கும் இம்ரான் ஹாஸ்மி

சென்னை, 18 அக்டோபர் 2023: 'டைகர்-3'யில் இம்ரான் ஹாஸ்மி நடிப்பதை ஒரு பெரிய ரகசியமாகவே வைத்திருந்தார் ஆதித்யா சோப்ரா. படத்தின் பிளாக்பஸ்டர் டிரைலரை பார்த்த பின்னர் அது ஏன் என்பதை நாம் தெரிந்து கொள்வோம். யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் வரிசையில் லேட்டஸ்ட்டாக உருவாகியிருக்கும் 'டைகர் 3'யில் ஒரு சூப்பர் ஏஜென்ட் ஆன டைகர் என்கிற அவினாஷ் சிங் ரத்தோரின் கொடூரமான வில்லனாக, இம்ரான் ஒரு மிகப்பெரிய சர்ப்ரைஸ் தான். பெருமூளை என இம்ரானை விவரிக்கும் விதமாக இரக்கமற்ற கூலித்தொழிலாளியாக தந்திரமான கதாபாத்திரம் அவருடையது.. அவனது மனம் தான் அவனது மிகப்பெரிய ஆயுதம். மேலும் அவன் நாட்டை சுற்றியுள்ள அதிகாரிகள் மீது மகத்தான சக்தியை பயன்படுத்துகிறான்.




மேலும் இம்ரான் டைகர்-3யில் தனது கதாபாத்திர பெயர் குறித்தும் தெரிவிக்கிறார். அவர் கூறும்போது, "ஆத்திரத்தால் தூண்டப்பட்ட மற்றும் டைகரை அழிப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய ஒரு மனிதனான ஆதிஷை உருவாக்குவதார்காக மிகச்சிறந்த நேரத்தை நான் பெற்றிருந்தேன். ஹிந்தி சினிமாவிலேயே அரிதான ஒரு தனித்துவமான வித்தியாசமான வில்லனாக நான் நடித்திருக்கிறேன். அவன் தான் 'பெரு மூளை', அவனது மனம் தான் மிகப்பெரிய ஆயுதம் மற்றும் அவனது வஞ்சகமான திட்டங்களை செயல்படுத்துவதற்காக நாட்டை சுற்றியுள்ள அதிகாரிகள் மீது மகத்தான சக்தியை பயன்படுத்துகிறான்.

மேலும் இம்ரான் கூறும்போது, "அவன் ஒரே மனதாக டைகரையும் அவரது குடும்பத்தையும் அழிக்க விரும்புகிறான். அதை செய்வதன் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய சூப்பர் ஏஜென்ட்டை இல்லாமல் செய்ய விரும்புகிறான். இந்தியாவுக்காக கடைசி வரை நிற்கும் மனிதனாக டைகர் இருப்பார் என்பது அவனுக்கு தெரியும் என்பதால் எந்த விலை கொடுத்தேனும் அவரை இல்லாமல் செய்வதற்கு அவன் விரும்புகிறான்" என்கிறார்.

'டைகர் 3' டிரைலர் ஆன்லைனில் வெளியானதை தொடர்ந்து நேற்று முதல் இம்ரான் ஹாஷ்மி வில்லனாக மாறியது ஒருமனதாக பாராட்டப்பட்டு வருகிறது. யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸில் வில்லனாக இருப்பதற்காக மகிழ்ச்சியடைவதாக இம்ரான் கூறுகிறார்.. மேலும் இம்ரான் கூறும்போது, "யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸின் வில்லன்கள் துருப்புச்சீட்டுக்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் உங்களை ஆச்சர்யத்தால் அசத்தியுள்ளனர். மேலும் என்னுடைய கதாபாத்திரம் ரசிகர்களை ஆச்சர்யத்தால் பிடித்து இழுக்க வேண்டும் என விரும்பிய ஆதித்ய சோப்ரா அதில் தெளிவாக இருந்தார். அதனால் தான் படம் முடியும் வரை என்னை மறைத்து வைக்கும் விதமான விரிவான திட்டமும் உருவாக்கப்பட்டது" என்கிறார்

மேலும், "டைகர் 3 பற்றி மக்களுக்கு சொல்வதற்காக நான் துடித்துக்கொண்டிருந்தேன்.. அப்படி என் கதாபாத்திரம் குறித்து மக்களிடம் வெளிப்படுத்தினால் அது உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மிக நன்றாகவே தெரியும் என்பதால் அப்படி செய்ய முடியவில்லை.. டைகர் 3 டிரைலர் வெளியாகும்போதுதான் வில்லனை வெளிச்சத்திற்கு கொண்டுவரவேண்டும் என்கிற முடிவில் தெளிவாக இருந்தோம். அதற்கேற்ப ரசிகர்கள் தற்போது எனது அச்சுறுத்தும் இந்த திருப்பத்தை நேசிக்கின்றார்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சி" என்கிறார் இம்ரான்.

வில்லன்கள் எப்போதுமே மறக்க முடியாத கதாபாத்திரங்களை உருவாக்க வேண்டும்.. அவை மக்களால் நீண்ட காலத்திற்கு நினைவில் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதை இம்ரான் எப்போதும் உணர்ந்தே இருக்கிறார். அவர் கூறும்போது, "எந்த ஒரு விதிமுறைகளை பற்றியும் கவலைப்படாத ஒருவனை பற்றி சொல்கிறோம் என்பதால் எப்போதுமே வில்லன்களாக நடிப்பதற்கு ஜாலியாகத்தான் இருக்கும். பதிலாக அவர்கள் தங்களுக்கென தனி விதிகளை உருவாக்குவார்கள். அதனால் இந்த வாய்ப்பு வந்ததும் அந்தப்பக்கம் தாவிவிட்டேன். ஏனென்றால் மக்கள் நீண்டகாலத்திற்கு ஞாபகத்தில் வைத்திருக்க கூடிய ஒரு வில்லனை உருவாக்குவதற்கான சுதந்திரத்தை நான் பெற்றிருக்கிறேன் என்பது எனக்கு தெரியும்" என்கிறார்.

மேலும், "ஒரு வழிகாட்டியாக இருந்து இந்த ஆதிஷ் கதாபாத்திரத்திற்கு உயிர்கொடுக்க உதவியதற்காக இயக்குநர் மனீஷ் சர்மாவுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு கொடுக்கப்பட்ட இந்த கதாபாத்திரம் அவரது தொலைநோக்கு பார்வையில் உருவானது தான். நான் பெருமிதப்படும் விதமாக ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கியதில் எனக்கு அவர் உதவி புரிந்திருக்கிறார்" என்கிறார் இம்ரான்.

சல்மான்கான், கத்ரீனா கைப், நடித்துள்ள 'டைகர் 3' வரும் நவ-12, ஞாயிறு அன்று தீபாவளி வெளியீடாக ரிலீஸாக இருக்கிறது. அதிரடியான ஆக்சன் காட்சிகளை கொண்ட இப்படத்தை கண்கவரும் விதமாக இயக்கியுள்ளார் மனீஷ் சர்மா.